(Chapter XXIII Code of
Criminal Procedure)

----

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE , MUDUKULATHUR**

| | | |
|---|---|---|
| Calender | .. .. | Case No. CC. 30 of 2020 |
| Miscellaneous | .. .. | |
| Preliminary Register | .. .. | |
| Sessions | .. .. | |
| | | Prosecution **P.W.7** |
| Deposition of witness for | | Defence |
| | | Court |

| | |
|---|---|
| Name | : சுரேஷ்குமார் |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 02 day of September 2022.

02.09.2022

**சாட்சி ஆஜர். சாட்சி அசல் ஆதார் அடையாள அட்டையை சரிபார்த்தும் இவர் தான் சாட்சி சொல்லும் நபர் என்று நீதிமன்றம் போலிசார் சாட்சியை அடையாளம் செய்து உறுதி செய்த பின்பு சாட்சியம் அளிக்கிறார். (ஆதார் அடையாள அட்டை நகல் பெறப்பட்டது).**

**முதல் விசாரணை**

**1. நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்கிறேன். ஆஜர் 1 மற்றும் 2 எதிரிகளைத் தெரியும். அவர்கள் எனது**

உறவினர்கள். 08.01.2018 ம் தேதி காலை 08.00 மணியிலிருந்து 09.00 மணிக்குள் நான் எனது பருத்திக் காட்டில் நின்று கொண்டிருந்த போது சத்தம் கேட்டது. பக்கத்து காடான 1ம் எதிரி முத்துவின் காட்டிற்கு சென்று பார்த்தேன். அப்போது அசா.1 ரவிக்குமாரும் முத்துவும் சண்டை போட்டுக் கொண்டிருந்தார்கள். நான் சென்று சண்டையை விலக்கி விட்டேன்.

**2.** பின்பு சிறிது நேரத்தில் ரோட்டில் வைத்து 2ம் எதிரி குமரவேல் அசா.1 ரவிக்குமார் மற்றும் அசா.2 ரமேஷ் ஆகியோருடன் சண்டை போட்டுக் கொண்டிருந்தார்கள். 2ம் எதிரி குமரவேல் மண்வெட்டியால் அசா.1 ரவிக்குமாரின் தலையில் வெட்டினார். அசா.2 ரமேஷ்க்கு காலில் இரத்தம் வந்தது. எந்த காலில் என்று தற்போது நினைவில் இல்லை. அசா.2 க்கு காலில் எவ்வாறு காயம் ஏற்பட்டது என்று நான் பார்க்கவில்லை.

**3.** காயம் பட்ட அசா.1 மற்றும் அசா.2 யை கீழத்தூவல் மருத்துவமனைக்கு இருசக்கர வாகனத்தில் அவர்கள் முன்னே செல்ல நான் அவர்களுக்கு பின்னே சென்றேன். போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

<u>**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

**1.** நான் 7ம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனக்கு ஆங்கில வருடங்கள் தேதி, மாதம் தெரியும். நான் விசாரிக்கப்படும் நேற்றைய தேதியிலிருந்து முந்தைய தினம் என்ன தேதி என்றால் 31ம் தேதி ஆகஸ்டு மாதம். எனக்கு சம்பவம் நடந்த இடத்தில் மயக்கம் வந்ததா என்றால் இல்லை.

**2.** யார் யாரை குறிப்பிட்டு தாக்கினார்கள் என்று என்னால் கூறமுடியாது என்றால் சரிதான். சண்டை நடந்து முடிந்த பின்பு தான் நான் சம்பவ இடத்திற்கு சென்றேன் என்றால் இல்லை. 2வது சண்டை நடந்து எத்தனை மணிநேரம் கழித்து சம்பவ இடத்திற்கு வந்தீர்கள் என்றால் 5

நிமிடம் கழித்து வந்தேன்.

**3.** வழக்கு சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தார்ச்சாலை எங்கிருந்து எங்கே செல்கிறது என்றால் திருவரங்கத்திலிருந்து அலங்காநல்லூர் செல்லும் சாலை ஆகும். வழக்கு சம்பவம் அந்த சாலையில் வைத்து தான் நடந்தது என்று சொன்னால் சரிதான். அசா.1 மற்றும் அசா.2 எனக்கு சித்தப்பா மகன்கள் ஆவார்கள்.

**4.** இவ்வழக்கின் எதிரிகளுக்கும் அசா.1 மற்றும் அசா.2 க்கும் இடையே தேர்தல் சம்மந்தமாக முன்விரோதம் இருந்தது என்று சொன்னால் சரிதான். யார் யாருக்கு எந்தெந்த இடங்களில் காயம் ஏற்பட்டது என்று எனக்குத் தெரியாது என்றால் ஆஜர் 1ம் எதிரி முத்துவிற்கு உடல் முழுவதும் சிராய்ப்பு காயங்கள் இருந்தது. 2ம் எதிரி குமரவேலுக்கு எந்த காயமும் இல்லை.

**5.** அசா.1 ரவிக்குமாருக்கு தலையில் யாரால் எவ்வாறு காயம் ஏற்பட்டது என்று நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். அசா.1 கேட்டுக்கொண்டதற்கு இணங்க அவர் கொடுத்த பொய் புகாருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.